22--

தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு சாகுபடி

வினா எண் *194*--**திரு. செ. இராமலிங்கம்:**

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1995-96 ஆம் ஆண்டிற்கு தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட கரும்பு சாகுபடி பரப்பு எவ்வளவு?

(ஆ) அரைவை செய்யப்பட்ட மொத்தக் கரும்பு எவ்வளவு?

(இ) வெட்டப்படாமல் இருக்கும் கரும்புக்கு மாற்று ஏற்பாடு ஏதேனும் உண்டா?

விடை--

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) நாகை-காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறில் அமைந்துள்ள நடிப்பிசைப்புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் 1995-96 ஆம் அரைவைப் பருவத்துக்கு 19,000 ஏக்கர் கரும்பு பரப்பு ஒப்பந்தம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 6.90 இலட்சம் டன்கள் கரும்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை 20-6-1996 வரை 2.55 இலட்சம் டன்கள் கரும்பை அரைத்துள்ளது.

(இ) வெட்டப்படாமல் மீதமுள்ள 3.40 இலட்சம் டன்கள் கரும்பில் 3.00 இலட்சம் டன்கள் கரும்பை கீழ்க்காணும் ஆலைகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1996 ஆகஸ்ட் 20]

			இலட்சம் டன்கள்
1.	திரு. ஆரூரான் 1 மற்றும் 2	–	2.00
2.	காவேரி	–	0.30
3.	அறிஞர் அண்ணா	–	0.30
4.	பெரம்பலூர்	–	0.20
5.	எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி	–	0.20
	மொத்தம்	–	3.00

மேலும் மேற்காணும் கரும்பு மாற்றம் குறித்து 8-6-1996 அன்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டிருந்தார்கள். அதில் மேற்காணும் ஆலைகளின் தலைமை நிர்வாகிகள், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து கரும்பு மாற்றம் செய்து ஆணைகள் வெளியிட்டதை ஏற்றுக்கொண்டு மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட கரும்பை ஆலைக்கு எடுத்து, முழுமையாக அரைத்து விடுவதாகவும் இதில் தக்க ஒத்துழைப்பு தருவதாகவும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

23--

கரும்பு, நெல் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவு

வினா எண் 649--**திரு. குத்தாலம் பி. கல்யாணம்**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் கரும்பு மற்றும் நெல் பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு?

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிடப்படும் பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: